DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 64/2024** |
| Deposition of Witness for | : PW 3 |
| Name | : முத்துராஜ் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 20.11.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 20th November 2025.

1,2 **எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது ரெட்டியபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி சுப்பிரமணியனை தெரியும். 06.06.2016 ம் தேதி காலை 9 மணியளவில் நான், எனது அம்மாவும், எனது அப்பாவும் வீட்டில் இருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள், சுப்பிரமணியன் சேர்ந்து எனது அம்மாவை அடித்தார்கள். எனது அம்மாவை வயிற்றில் அடித்தார்கள். அப்போது எனது அம்மாவை தேவடியாமுண்ட என்று ஏசினார்கள். அப்போது நான் அங்கு வந்தபோது என்னை பொன்னப்பயலே என்றுசொல்லி எதிரி சுப்பிரமணி என்னை கம்பாலும், கையாலும் அடித்தார்கள். எதிரி சுப்பிரமணி எனது வலதுபக்க கன்னத்தில் கடித்தார். கடித்ததில் என் கன்னத்தில் பல்தடம் பதிந்தது. நான்

என் அம்மாவை சங்கரன்கோவில் அரசு மருத்துவனைக்கு சிகிச்சைக்கு சேர்த்துவிட்டு நானும் சிகிச்சைக்கு சேர்ந்தேன். மருத்துவமனைக்கு வந்த போலீசாரிடம் என் அம்மா புகார் வாக்குமூலம் கொடுத்தார். போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | | --- |
| Miscellaneous | | --- |
| Preliminary Register | : | **CC 64/2024** |
| Deposition of Witness for | : | PW 4 |
| Name | : | பூல்பாண்டி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 20.11.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 20th November 2025.

1,2 **எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது ரெட்டியபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஆடுமேய்க்கும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 யை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி சுப்பிரமணியனை தெரியும். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 07.06.2016ம் தேதி காலை 7 மணியளவில் அ.சா.1 அவர் வீட்டின் முன்பு இருந்தபோதுஅங்கு வந்த ஆஜர்

எதிரிகள் முன்விரோதத்தின் காரணமாக அ.சா.1 யை கெட்டவார்த்தையால் பேசி அடித்து  கொடுங்காயம் ஏற்படுத்தினார்கள் என்றும், அவரை பெண் என்றும் பாராமல் அவமானப்படுத்தினார்கள் என்றும், கொலைமிரட்டல்  விடுத்தார்கள் என்றும்  கூறிவிட்டு தற்போது அதற்கு மாறாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**